# பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி

முன்னுரை: :

தொல்காப்பியர் காலந்தொட்டு பாரதியார் காலம்வரை வாழையடி வாழையாக எண்ணற்ற தமிழ்ப்புலவர்கள் தோன்றிய வண்ணமாக உள்ளனர். அவர்கள் ஏட்டிலும் நாட்டிலும் கவிதையிலும் கற்பனையிலும் செய்த புரட்சிகள் யாவற்றையும் சொல்லால் அளவிட்டு உரைத்தல் இயலாது. அவர்கள் தமிழுக்கும் தமிழினத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். வாராது வந்த மாமணியாகி, இமைக்கும் நேரங்கூடச் சோர்ந்துவிடாமல் கவிமழை பொழிந்தவர் நம் தேசியக் கவி பாரதியார்.

பிறப்பும் இளமையும் :

இவர் தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் 11-12-1882-இல் அருந்தவப் புதல்வனாய்ப் பிறந்தார். பதினொரு வயதிலேயே கவிதை பாடிப் புலவர்கள் பலரைத் தோற்கடித்து, எட்டயபுர மன்னர் அவையில் 'பாரதி' என்ற பட்டத்தைப் பெற்றார். தமிழில் சிறந்த புலமை பெற்றதோடு, ஆங்கிலம், இந்தி, வங்காளம், வடமொழி ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

பெண்விடுதலை:

'பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா' என்றும், பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இத்திருநாட்டில் மண்ணடிமை தீருதல் முயல்கொம்பே' என பெண் அடிமைத்தனம் ஒழிந்தால் தான் நாடு வளம் பெறும் என முற்போக்காகச் சிந்தித்தவர். நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞான செருக்கு, ஆகியவை பெண்ணுக்கு இருக்க வேண்டும். பெண் தன் சமுதாயக் கட்டுக்குள் இருந்து விலகிச் செல்லாமல் தன் உரிமைகளை நிலை நிறுத்திக் கொள்வதற்காகப் போராடும் குணம் உடையவளாக இருக்கின்றாள். இத்தகைய சூழ்நிலையைப் பாரதியார் பல பாடல்களில் பதிவிட்டுள்ளார்.

சாதிகள் இல்லையடி பாப்பா:

சாதி அடிப்படையில் அமைந்த தீண்டாமை என்பது மிகக்கொடிய ஒன்றாகும். தன் வீட்டில் நாய், பூனை போன்றவற்றிற்கு இடங்கொடுத்து அன்பு செலுத்துகின்ற மனிதன், மனித இனத்தில் உடன் பிறந்தோரைத்

தீண்டத்தகாதவர் என விலக்கி வைப்பதும் விலகி வாழ்வதும் பண்பாடற்ற செயல் என்பது பாரதியாரின் கருத்து. தீண்டாமை என்பது உடலோடு மட்டும் தொடர்பு உடையது அன்று. அது உள்ளத்துள்ளே உறைந்து கிடப்பது. உதட்டளவில் மட்டும் சாதியை ஒழிப்பதாகக் கூறிவிட்டு உள்ளுக்குள்ளே சாதிவெறியை வளர்ப்பதால் எந்தப் பயனும் இல்லை. குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் சாதி என்ற நச்சுணர்வை விதைத்து விடுகின்றனர். அவர்கள் வளர வளர அந்தத் தீய உணர்வும் வளர்கிறது. அந்தப் பிஞ்சு நெஞ்சங்களில் சாதிகள் இல்லை என்ற உணர்வை விதைக்க வேண்டும் என்று கருதிய பாரதியார்.

சாதிகள் இல்லையடி பாப்பா குலத்

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

எனக் கூறுகிறார்.

பாரதியின் பாடல்கள் :

“முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்” எனப் பாடினார். ‘நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம் அது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்’ என உரிமைக்குப் பாடினார். விடுதலைக்கு முழக்கமிட்டார். “பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந் தனவே” எனப் பாடினார். ‘சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்’ என்று நம்மை வேண்டினார். ‘பாருக்குள்ளே தெய்வம் ஒன்று; இதில் பற்பல சண்டைகள் வேண்டா’ என மதங்களுள் ஒருமைப்பாடு காட்டுவார் பாரதியார். ‘ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே’ எனப் பாடிப் பெண்ணின் உரிமைக்குக் குரல் கொடுத்தார்.

முடிவுரை :

பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்தவர் பாரதியார். தமிழ்நாட்டுக் கவியாய்த் தோன்றித் தேசியக் கவியாய் வளர்ந்து உலகக் கவியாய் மறைந்தார். அவரது புகழ் பார் உள்ளளவும் நீர் உள்ளளவும் நிலைபெறும்.

பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்கப் பாடி வந்த பாரதி வாழ்க! வாழ்க!